<u>2026 ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW14 (LW20) – மாதவி |
| கணவர் பெயர்: | முருகன் |
| ஊர்: | உத்தரகோஷமங்கை மள்ளல் |
| வட்டம்: | கீழக்கரை |
| மாவட்டம்: | இராமநாதபுரம் |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், உத்தரகோஷமங்கை மள்ளல் கிராமம் |
| வயது : | 43 |

22.07.2026

(1, 2, 3, 9 எதிரிகள் ஆஜர். 4 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், உத்தரகோஷமங்கை மள்ளல் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டம், காரான்குரூப் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 29.02.2020 ம்

தேதி காலை 8.00 மணியளவில் தாசில்தார் திரு.முருகவேல் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் திரு.புவனேஷ்வரன் அவர்களுக்கு அலைபேசியில் அழைத்து தகவல் சொன்னார். கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் கொலை வழக்கு சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலரையும், என்னையும் சேதுநகருக்கு செல்ல கூறினார்.

2. நானும், கிராம நிர்வாக அலுவலரும், போலீசார் அனைவரும் பள்ளிவாசல் அருகில் உள்ள கடற்கரை, சர்வேஸ்வரா டிரஸ்டிக்கு சொந்தமான சர்வே எண்.168 இடத்திற்கு சென்றோம். நாங்கள் அந்த இடத்தை பார்த்தோம். பின்னர் ஜே.சி.பி. வாகனத்தை வரச்சொல்லி கிராம நிர்வாக அலுவலர் தகவல் சொன்னார். கொலை சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் 7வது எதிரி கிஷோர், 8வது எதிரி நாகராஜ் ஆகியோர்கள் கடற்கரை, சர்வேஸ்வரா டிரஸ்டிக்கு சொந்தமான இடத்தில் புதைத்ததாக போலீசார், தாசில்தார் மற்றும் எங்கள் முன்னிலையில் அடையாளம் காட்டினார்கள்.

3. பின்னர் எதிரிகள் அடையாளம் காட்டிய இடத்தை ஜே.சி.பி. ஓட்டுநரிடம் தோண்ட சொன்னோம். சுமார் 4 அடி தோண்டியவுடன் எலும்புக்கூடாகவும், கொஞ்சம் சதையாகவும், உடல் அழுகிய நிலையிலும், வெட்டுப்பட்ட நிலையிலும் இருந்தன. போலீசார் பிரேதத்தின் அருகில் நின்று விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். 7வது எதிரி கிஷோர் வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணினியில் போலீசார் தட்டச்சு செய்தார்கள். பின்னர் தட்டச்சு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தை சேதுநகர் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள கணினி வசதியுள்ள கடையில் பிரிண்ட் அவுட் எடுத்தார்கள்.

4. கொலை நடந்த சிறிது தூரத்தில் தோப்பில் மட்டைவிரிச்சிக்கு பின்னாடி உள்ள வேம்பு மரத்திற்கு அருகில் இருந்த நான்கு அரிவாள்களை 7வது எதிரி கிஷோர் எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் அதை அத்தாட்சியில்

கைப்பற்றினார்கள். பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியை போலீசார் கையில் எழுதி தயார் செய்தார்கள். அதில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

5. நான் செல்வதற்கு முன்பே பள்ளம் தோண்டப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. இடத்திற்கு சொந்தக்காரர்கள் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. பொதுமக்களிடமிருந்து பார்வை மகஜரில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை. அரிவாள்கள் கைப்பற்றப்படும்போது இரத்தம் இருந்ததா என்றால் இல்லை. அரிவாள்களை அன்று பார்த்ததற்கு பின்னர் இன்று பார்க்கிறேன் என்றால் சரிதான். பொதுவாக அரிவாள்கள் வெளிச்சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான். சா.பொ.1 முதல் சா.பொ.4 அரிவாள்களில் தனிப்பட்ட அடையாளம் காட்டி குறிப்பிடும் அளவிற்கு அடையாளம் இல்லை என்றால் சரிதான்.

6. கிஷோர் மற்றும் நாகராஜ் பெயர்கள் போலீசார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர்களை அதற்கு முன்பும், பின்பும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலருக்கு முத்திரை உள்ளது என்றால் சரிதான். அலுவல் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் முத்திரை வைக்க வேண்டும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலருக்கு வில்லேஜ் அக்கவுண்ட்ஸ் என்று தனியாக ஒரு பதிவேடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பதிவேட்டில் நிகழ்விடத்தில் நடந்த விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என்றாலும், பதிவு செய்து ஆவணத்தை தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான், நாங்கள் அறிக்கை தயார் செய்து, அதை எங்கள் உயரதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டோம்.

7. வில்லேஜ் அக்கவுண்ட்ஸ் பதிவேட்டில் பதிவு செய்ததை எங்கள் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். வில்லேஜ் அக்கவுண்ட்ஸ் பதிவேட்டை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், கிஷோர், நாகராஜ் ஆகியோர்களை பார்க்கவில்லை என்றாலும், கிஷோர் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன்பேரில் அரிவாள்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் பள்ளம் தோண்டவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு, என்னிடமும், கிராம நிர்வாக அலுவலரிடமும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.22 17:37:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.07.2026